## 26. உம்மை மறந்தேன் உம்மை

### பல்லவி

உம்மை மறந்தேன் உம்மை பிரிந்தேன்
நான் தூரமாய் போனேனே
உம்மை மறந்தேன் உம்மை பிரிந்தேன்
நான் துரோகியாய் ஆனேனே

### சரணங்கள்

1. என்னை அனைத்த உம் நேச கரம்
என்னை இழுத்த உம் பாச கரம்
உம்மை போல தேவன் பூமியில் இல்லை
உமது பாதத்தில் சாஷ்டங்கமானேன்
- உம்மை மறந்தேன்

2. தாயினை போல அரவணைத்தீர்
தகப்பனை போல என்னை சுமந்து வந்தீர்
இரக்கமுள்ள தேவன் நீரே
உம் கருனையால் உயிர் வாழ்கிறேன்
- உம்மை மறந்தேன்

3. எனக்காய் சிலுவையில் அடிக்கப்பட்டீர்
எந்தன் பாவம் சுமந்து விட்டீர்
உமது இரத்தத்தால் என்னை கழுவி
நீதிமானாக மாற்றி விட்டீர்
- உம்மை மறந்தேன்